பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 26 ஞாயிற்றுக்கிழமை 13.11.2022 கதிர் 260

கோப்பாய் பிரதேசத்தில் மர்மப்பொருள் வெடிப்பு

இருவர் காயம்; விசாரணை முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், கோப்பாய், கைதடி வீதியில் இன்று காலை மர்மப்பொருள் ஒன்று வெடித்

8

மோசடிக்காரி திலினியுடன் ஞானசாரருக்குத் தொடர்பா?

இரண்டரை மணிநேரம் சி.ஐ.டி. விசாரணை



பாரிய நிதி மோசடி தொடர்பில் விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ள திலினி பிரியமாலி தொடர் பாக முன்னெடுக்கப் படும் விசாரணைக ளுக்காகப் பொதுபல சேனா அமைப்பின் பொதுச்

2

மன்னாரில் இன்று கோர விபத்து

மரத்துடன் மோதுண்டது பட்டா; சாரதி நசியுண்டு பரிதாபப் பலி

(வவுனியா நிருபர்)

மன்னார் – மதவாச்சி பிரதான வீதியில் உள்ள இசைமாலைதாழ்வுப் பகுதியில் இன்று காலை 9.20 மணியளவில் இடம் பெற்ற விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே

2

வாய்ப்பேச்சு வேண்டாம்; செயலில் இறங்குங்கள்

ரணிலிடம் சம்பந்தன் வலியுறுத்து

‘நாங்கள் பேசப் போகின்றோம்; செய்யப் போகின்றோம்’ என்று சொல்லிக்கொண்டிருக்காமல் பேசிச் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டும். அதுதான் முக்கியம். ஜனாதிபதி ரணிலின் செயற்பாடுகள் நம்பிக் கைக்குரியதாக இருந்தால் எங்களது முழுமையான ஆதரவு கிடைக்கும்.

8

பூசகர் வேடத்தில் வந்து சிவலிங்கம் கொள்ளை

யாழ்., இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதகல் சம்பில் துறை சம்புநாதஈஸ்வர ஆல யத்தின் மூலஸ்தான லிங்கேஸ் வரர் திருடப்பட்டுள்ளது என்று ஆலய நிர்வாகத்தால் இள வாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட் டுள்ளது.

2

இலங்கை மீனவர்கள் 11 பேர் கைது

இந்தியக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த குற்றச் சாட்டின் கீழ் இரண்டு படகு களுடன் 11 இலங்கை மீனவர்கள் இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

ஸ்ரீகாகுளம் மாவட்டம், கலிங்கப்பட்டினம்கடற்கரையில் இருந்து 175 நாட்டிக்கல்

8

22 வயது காதலியை மறைத்துவைத்திருந்த 16 வயது மாணவன்

இருவரும் பொலிஸ் காவலில்

ஒரு மாத காலமாக தனது காதலியைப் படுக்கை அறை யில் கட்டிலுக்கு அடியில் ம றைத்து வைத்திருந்த பாட சாலை மாணவன் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் சம்பவம்

2

வாவியில் மூழ்கி மாயமான மற்றைய இரு சிறுமிகளும் சடலங்களாக மீட்பு!

சூரியவெவ – மஹாவெலிக்கட ஆரா வாவியில் படகு ஒன்று கவிழ்ந்ததில் காணாமல்போயி ருந்த மூன்று சிறுமிகளும் சட லங்களாக மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுப் பிற்பகல் காணா மல்போயிருந்த

2

அமிர்தலிங்கத்தின் புதல்வர் காலமானார்

இலங்கையின் முதலாவது தமிழ் எதிர்கட்சித் தலைவரான அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் மூத்த புதல்வர் அமிர்தலிங்கம் காண் டீபன் இலண்டனில் இன்று கால மானார்.

அஜித் டோவலை டில்லியில் சந்தித்த மிலிந்த மொரகொட

இந்தியாவுக்கான இலங்கையின் தூதுவர் மிலிந்த மொரகொட இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலைப் புதுடில்லியில் நேற்று சந்தித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடை யிலான உறவுகளின் தற்போதைய நிலை தொடர்பில் இதன்போது மீளாய்வுசெய்யப்பட்டது எனத் தூதரகம்

2

பொலிஸாரின் அராஜகங்களுக்கு சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

அமைதியான மற்றும் முறையான போராட்டங்களைத் தடுக்கும் அதேவேளையில், நிராயுதபாணிகளான பொதுமக்களைப் பொலிஸார் தொடர்ந்து தாக்கி கைது செய்து வருகின்றனர் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

மோசடிக்காரி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (சி.ஐ.டி.) சென்று வந்துள்ளார்.

அவரிடம் இரண்டரை மணித்தியாலங்கள் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன என்று அவர் இன்று ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு சென்றிருந்த அவர் பிற்பகல் 5.30 மணியளவில் அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

வாவியில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று சிறுமிகளில் 10 வயது சிறுமியின் சடலம் நேற்று மாலை கடற்படையினரால் மீட்கப்பட்டது.

இந்நிலையில், இன்று காலை, பொலிஸ் மற்றும் கடற்படையின் சுழியோடிகள் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில், ஏனைய இரண்டு சிறுமிகளின் சடலங்களும் மீட்கப்பட்டன.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 16 மற்றும்18வயதுடையஇரண்டுசகோதரிகளே இன்று காலை சடலங்களாக மீட்கப்பட்டனர்.

8 பேர் பயணம் செய்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், அவர்களில் எட்டு மாதக் குழந்தை உட்பட 5 பேரைப் பிரதேச மக்கள் காப்பாற்றியிருந்த போதிலும் மூன்று சிறுமிகள் காணாமல்போயிருந்தனர்.

மூவரையும் தேடி முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் போதே அவர்கள் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

நேற்றுப்பிற்பகல்குருநாகலிலிருந்து சூரியவெவ பிரதேசத்தில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்ற குழு ஒன்று, மீன்பிடிப் படகு ஒன்றில் மஹாவெலிக்கட ஆர வாவியைப் பார்வையிடச் சென்றிருந்தனர்

அதன்போது, குறித்த படகு கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றளது.

கடந்த தினம் ஊடகங்களில் வெளியான திலினி பிரியமாலியின் தொலைபேசி உரையாடலில், கலகொட அத்தே ஞானசார தேரர் தொடர்பிலும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதையடுத்தே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு கலகொட அத்தே ஞானசார தேரருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

மரத்துடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தார். சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பட்டா ரக வாகனம் வீதியின் அருகில் இருந்த மரத்தில் மோதுண்டு விபத்துக்குள்ளானது. இதன்போது சாரதி வாகனத்தினுள்நசியுண்டுஉயிரிழந்தார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த முருங்கன் பொலிஸார் விபத்து தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் மன்னார் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பூசகர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயத்துக்குப்பூசகர்வழமைபோன்று பூசைக்காக நேற்று சென்ற போதே சிவலிங்கம் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து சி.சி.ரி.வி. காணொளிகளைச் சோதனை செய்த போது பூசகர் வேடத்தில் வந்த ஒருவர் சிவலிங்கத்தை திருடிச் சென்றமை தெரியவந்தது.

திருடப்பட்ட சிவலிங்கம் இந்தியாவின் காசி புனித பிரதேசத்திலிருந்து 1998ஆம்ஆண்டுகொண்டுவரப்பட்டது என்றும், 20 இலட்சம் ரூபா பெறுமதியானது என்றும் முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சுற்றிவர கடற்படையினரின் கடுமையான கண்காணிப்பு உள்ள நிலையிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

அஜித் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளின் பரஸ்பர நலன்கள் மற்றும் எதிர்கால ஒத்துழைப்பின் போது முன்னுரிமையளிக்கப்படும் விடயங்கள் உள்ளிட்டவை இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

பொலிஸாரின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மூன்று இடங்களில் நடைபெற்ற போராட்டங்களைப் பொலிஸார் அடக்கிய விதம் மிகவும் வெட்கக் கேடானதுஎன்றுஅவர்தனதுஉத்தியோகபூர்வ 'பேஸ்புக்' பக்கத்தில் இட்டுள்ள பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

களுத்துறையில் இருந்து கொழும்புக்கு நடைபயணமாக வந்த ஆர்ப்பாட்டக்காரர்களான இரண்டு பெண்களும் அவர்களுக்கு ஆதரவளித்த மக்களும் கைது செய்யப்பட்டமை இதன் உச்சக்கட்டமாகும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே மற்றும் அனைத்துப் பல்கலைக்கழக பிக்குகள் பேரவையின் ஏற்பாட்டாளர் வண. கல்வெவ சிறிதம்ம தேரர் ஆகியோரை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரி இரண்டு பெண்களும் தமது எதிர்ப்புப் பேரணியை முன்னெடுத்தனர்.

அங்கு வாதுவ, பாணந்துறை ஆகிய இடங்களில் பேரணியைத் தடுத்தப் பொலிஸார் கொரகபொல பிரதேசத்தில் வைத்து இரண்டு பெண்களையும் கைது செய்தனர்.

இதற்கிடையில், இந்தச் சம்பவத்துடன் மற்றுமொரு சம்பவத்தின் காட்சியையும் சாலிய பீரிஸ் பேஸ்புக்கில் பகிர்ந்துள்ளார்.

அதில் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் கழுத்தைப் பிடித்துதள்ளும்காட்சிபதிவாகியுள்ளது.

எந்தவொரு காரணத்துக்காகவும் பெண்களைத் துன்புறுத்துவதும் ஒடுக்குவதும், அமைதியான போராட்டங்கள் மற்றும் நிராயுதபாணியான பொதுமக்கள் மீது எந்த அடிப்படையும் இல்லாமல் கொடூரமாகத் தாக்குதல் நடத்துவதும்பொலிஸாரின்வெட்கக்கேடான செயல் என்றும் சாலிய பீரிஸ் கண்டித்துள்ளார்.

மேலும் இதுபோன்ற சம்பவங்கள் பொலிஸாரின்ஒழுக்கம்சீர்குலைந்துள்ளதை மேலும் எடுத்துக் காட்டுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

22 வயது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உஹன பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. தற்போது இருவரும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். காதலிக்கு 22 வயது எனவும், மாணவனுக்கு 16 வயது எனவும் தெரிய வந்துள்ளது.

அம் மாணவனின் பெற்றோர் கடையொன்றை நடத்தி வருகின்றனர் எனவும், அவர்கள் அதிகாலையில் வீட்டை விட்டு வெளியேறி இரவு தாமதமாக வருகின்றனர் எனவும் தெரியவந்துள்ளது.

அதன் காரணமாக பகலில் வீட்டில் யாரும் இல்லாததால், தனது காதலியை இரவு நேரத்தில் கட்டிலுக்கு அடியில் அவர் மறைத்து வைத்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது. அறையில் வைத்தே காதலிக்குத் தேவையான உணவை மாணவன் கொடுத்தார் எனவும், ஒரு சந்தர்ப்பத்தில், பகலில் திடீரென வீட்டுக்கு வந்த மாணவனின் தாய், மகனின் காதலியைக் கண்டு பிடித்துள்ளார். இந்தச் சம்பவத்தை தந்தையிடம் கூற வேண்டாம் என்று மகன் தயாரிடம் கேட்டுக்கொண்டுள்ளார். எனினும், பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் இருவரையும் கைது செய்த பொலிஸார், தமது காவலில் வைத்து விசாரணை முன்னெடுத்து வருகின்றனர்.

பொலிஸ் விசாரணையின்போதுதான் சம்பவம் தொடர்பில் தந்தைக்குத் தெரிய வந்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

நாளைய கசப்பு மருந்து

நிதி அமைச்சர் என்ற முறையில் நாட்டின் அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போகின்றார்.

இந்த ஆண்டுக்கான இடைக்கால நிதி ஏற்பாட்டை முன்னர் சமர்ப்பித்த அவர், இப்போதுதான் முழுமையான வரவு – செலவு திட்டம் ஒன்றை முன்வைக்கின்றார். இந்த வகையில் இது அவரது கன்னி வரவு – செலவுத் திட்ட உரை.

வரவே இல்லாத நாட்டுக்கு வரவு – செலவுத் திட்டம் என்ற ஒன்றைத் தயாரிப்பது எத்தகைய கற்பனை ஆக்கப் பணி என்பது ஊகிக்கத்தக்கதே.

தேவையான அளவுக்கு – பற்றாக்குறை அல்லது துண்டு விழும் தொகைக்கு – பண நோட்டுக்களை கண்மூடித்தனமாக அச்சடித்துத் தள்ளும் ஒரு கட்டமைப்புக்கு வரவு – செலவு திட்டம் என்ற ஓர் ஆழமான ஆவணம் தேவைதானா என்று சில விமர்சகர்கள் ஏளனத்துடன் கேட்பதும் புரிகின்றது.

அதல பாதாளத்தில் வீழ்ந்து, மீள முடியாமல் சிக்கிக் கிடக்கும் இலங்கை நாட்டை அந்தப் பொருளாதார சரிவிலிருந்து மீட்கும் பகீரதப் பிரயத்தன முயற்சியில் ஜனாதிபதி ரணிலும் அவரது அரசும் ஈடுபட்டிருக்கின்றமை மறுக்க முடியாத உண்மை.

இந்த நெருக்கடியில் இருந்து மீண்டெழுவதற்கு சர்வதேச நாணய நிதியத்திடம் சரணாகதி – தஞ்சம் – அடைந்திருக்கின்றது இலங்கை நாடு.

ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் அருட் பார்வை – கருணைக் கடாட்சம் – இன்னும் கிடைப்பதாகத் தெரியவில்லை. எல்லாம் பேச்சளவிலேயே உள்ளன. இந்தா கடன் வருகின்றது, உதவி கிட்டுகின்றது, 29 பில்லியன் டொலர் கடன் உதவி கட்டம், கட்டமாகக் கட்டாயம் என்றெல்லாம் செய்திகள் வெளியாகின. ஆனால் உருப்படியாக எதுவுமே வந்து சேரவில்லை. முதலில் இந்த வருட இறுதிக்கு முன்னர் கிடைக்கும் என்றார்கள். பின்னர் அடுத்த வருட முற்பகுதியில் என்கிறார்கள். எதுவுமே நிச்சயம் இல்லை.

ஆக, இத்தகைய நம்பிக்கை இல்லா வரும்படிகள், உதவிகள், நன்கொடைகள், கடன்களைக் கணக்கிட்டுத்தான் உத்தேச மதிப்பில், இந்த வரவு – செலவுத் திட்டத்தை ரணில் விக்கிரமசிங்க தயாரித்திருப்பார். அதுதான் அவருக்குள்ள கட்டாய நிலைமை.

எனினும், இந்தப் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு சமாளிப்பதற்காக பல இக்கட்டுகளை – நெருக்கடிகளை – கஷ்டங்களை – மக்களும் நாடும் எதிர்கொண்டாக வேண்டும், அது தவிர்க்க முடியாத ஒன்று என ஏற்கனவே பல தடவைகள் நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்க கூறி வருகின்றார்.

நாளைய வரவு – செலவு திட்டத்தில் அவர் நாட்டுக்கு தரப்போகின்ற கசப்பு மருந்துக்கான முன்னோட்ட அறிவிப்புகள்தான் அவை.

நெருக்கடியில் விழுந்து கிடக்கும் நாட்டின் வரவு – செலவுத் திட்டம் மக்களின் அடிவயிற்றில் கையை வைப்பதாகவே இருக்கும் என்பது பெரும்பாலும் உறுதியானது.

நாளை சர்வதேச நீரிழிவு தினம். அன்றைய தினம் இனிப்பை எதிர்பார்ப்பது அர்த்தமற்றதுதான்..!

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் இந்தியா விஜயம்!

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் இந்தியாவிற்கு நேற்று (சனிக்கிழமை) திடீர் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்தியாவின் கூடலூர் மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் பொன் ஜெயசீலனின் அழைப்பின் பேரிலே அவர் இந்தியா சென்றுள்ளார்.

இதன்போது கூடலூர் ரென் ரி தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் சிவில் அமைப்பினர் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு உடனடி தீர்வுக்கான பேச்சைக் கோரி அவர் இந்தியா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பு: 77 லட்சம் ரூபாவிற்குமேல் மோசடி!

ஒருவர் கைது

வெளிநாட்டு தொழில்வாய்ப்பை பெற்று தருவதாகக் கூறி 77 லட்சம் ரூபாவிற்கு மேல் மோசடி செய்த நபரை திருகோணமலை விசேட குற்றப்புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

திணைக்களத்துக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நிலாவெளி பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவர் என்பதோடு அவர் நேற்று (சனிக்கிழமை) திருகோணமலை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

மன்னார் மாவட்ட பொதுவைத்தியசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் விஜயம்!

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வைத்தியசாலை பணிப்பாளரின் வேண்டுகோளுக்கு இணங்க நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேற்று (சனிக்கிழமை) காலை விஜயம் செய்தார்.

இதன்போது வைத்தியசாலை மற்றும் வைத்தியர்கள் எதிர் கொண்டு வரும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

மேலும் வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பெருந்தொகையான பப்பாசி மரங்களை நெடுங்கேணியில் அழித்தன யானைகள்!

வவுனியா வடக்கு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட நெடுங்கேணியில் பெருந்தொகையான பப்பாசி மற்றும் தென்னை மரங்களை யானைகள் அழித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி புளியங்குளம் பிரதான வீதிக்கு அருகில் சுமார் 8 ஏக்கர் அளவில் பப்பாசிசெய்கை முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை இரவு தோட்டத்தினுள் உள்நுழைந்த யானைகள் அறுவடைப் பருவத்தில் காணப்பட்ட சுமார் 150 இற்கும் மேற்பட்ட பப்பாசி மரங்களை முறித்து அழித்துள்ளது.

இதேவேளை அருகில் உள்ள காணிக்குள் புகுந்த யானைகள் ஒருதொகை தென்னை மரங்களையும் அழித்துள்ளன.

மேலும் யானை வேலி அமைக்கப்பட்டு இருந்தும் தமக்கு பிரியோசனம் இல்லை என அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேவேளை தற்போது வளர்ப்பு யானைகள் இந்தப் பகுதியில் வருவதால் இந்த அழிவுக்கு காரணம் எனவும், விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே இதற்கான சரியான தீர்வை தமக்கு பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தாமதக் கட்டணம் வழங்கப்படாதமையால் நங்கூரமிடப்பட்டுள்ள மசகு எண்ணெய் கப்பல்

மசகு எண்ணெய் தாங்கிய கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் நங்கூரமிட்டு 55 நாளகளை கடந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கு மசகு எண்ணெயை இறக்குமதி செய்ய வந்த கப்பலே இவ்வாறு காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் இந்தக் கப்பலுக்காக 79 லட்சம் டொலர்களுக்கு மேல் பணமாக செலுத்த வேண்டியுள்ளதாக பெற்றோலிய தொழிற்சங்கங்கள் சுட்டிகாட்டியுள்ளன.

மேலும் இந்தக் கப்பல் செப்ரெம்பர் 20 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை அண்மித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெ. விமான சாகசத்தில் விபத்து 6 பேர் உயிரிழப்பு

டெக்சாஸ், நவ.13

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் டல்லாஸ் நகரில் விமான படை சார்பில் 2ஆம் உலக போர் காலத்தின் விமானங்கள் அடங்கிய சாகச நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. இதில் பங்கேற்ற, பெரிய ரக போயிங் பி-17 குண்டுகள் வீசும் விமானம் மற்றும்ஒருசிறியரகபெல்பி-63கிங்கோப்ரா என்ற விமானமும் விண்ணில் பறந்து சென்ற நிலையில், இந்த இரு விமானங்களும் குறிப்பிட்ட அடி

உயரத்தில் பறந்து சென்றபோது, நடுவானில் திடீரென மோதி விபத்தில் சிக்கியுள்ளன எனக் கூறப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் நேராக முன்னோக்கி சென்ற போயிங் விமானத்தின் மீது அதன் இடதுபுறத்தில் சென்று சிறிய விமானம் மோதி உள்ளது. இரண்டு விமானங்களும் விபத்தில் துண்டுகளாக உடைந்து சிதறியுள்ளமையுடன், தரையில் விழுந்து தீப்பிடித்து எரிந்தன. இந்நிலையில், விமானத்தில் இருந்த விமானிகளின்நிலை என்னவென தெரியவில்லை எனடல்லாஸ்மேயர்எரிக்ஜான்சன்டுவிட்டரில்

தெரிவித்திருந்தார்.

இரண்டும் போர் விமானங்கள் வகையை சேர்ந்தவை. இதில், போயிங் விமானம், ஜெர்மனிக்கு எதிராக இரண்டாம் உலக போரில் வெற்றி பெற முக்கிய பங்காற்றிய, 4 என்ஜின்கள் கொண்ட, குண்டு மழை பொழியும் விமான வகையாகும். இவற்றில் மற்றொரு சிறிய விமானமும், போர் விமானம் ஆகும்.இரண்டாம்உலகபோரின்போது, தயாரிக்கப்பட்ட இந்த விமானம் சோவியத் விமான படையால் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

இந்த விமான சாகச நிகழ்ச்சியில் நாற்பதுக்கும் கூடுதலான, 2 ஆம் உலக போர் காலத்து விமானங்கள் பங்கேற்றன.

இது தொடர்பில் விமான படையை சேர்ந்த பெண் செய்தி தொடர்பாளர் லீ பிளாக் ஏ.பி.சி. செய்தி நிறுவனத்திடம் கூறும்போது, போயிங் ரக விமானத்தில் 5 பேர் மற்றும் சிறிய விமானத்தில் ஒருவர் என மொத்தம் 6 பேர் பயணித்து உள்ளனர் என நம்பப்படுகிறது" என கூறியுள்ளார். இதனால், இந்த 2 ஆம் உலக போர் விமானங்களின் வான்சாகச நிகழ்ச்சியில் ஏற்பட்ட விபத்தில் சிக்கி 6 பேர் உயிரிழந்திருக்க கூடும் என அஞ்சப்படுகிறது.

வறுமையால் தமது குழந்தையை விற்கமுயன்ற ஆப்கான் குடும்பம்

காபூல், நவ.13

ஆப்கானிஸ்தானின் பால்க் மாகாணத்தில் உள்ள ஒரு குடும்பம் வறுமையின் காரணமாக தங்கள் குழந்தையை விற்க முயன்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. அதன் பின்னர். மாகாணத்தில் உள்ள சில உள்ளூர்வாசிகள் அக்குடும்பத்தின்பொருளாதார நிலைமையை மேம்படுத்த உணவு மற்றும் பிற உதவிகளை வழங்கிய பின்னர் அந்த இரண்டு வயது குழந்தை விற்கப்படாமல் காப்பாற்றப்பட்டுள்ளது.

இதுகுறித்து குழந்தையின் தாய் தெரிவிக்கும் போது, நான் மிகவும் கடினமான சூழ்நிலையில் இருக்கிறேன். என்னிடம் சாப்பிட அல்லது எரிபொருளைப்பயன்படுத்த எதுவும்

இல்லை. குளிர்காலத்தில் வீட்டிற்கு தேவையான அத்தியாவசிய பொருள்களை வாங்கமுடியவில்லை. கடுமையான வறுமையின் காரணமாக எனது குழந்தையை விற்க முயற்சி செய்தேன். என்று அவர் கூறினார்.

மேலும், உள்ளூர் அரசாங்கமோ அல்லது மனிதாபிமான அமைப்புகளோ தனக்கு ஒரு

வருடத்திற்கும் மேலாக எந்த உதவியும் செய்யவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தானை தலிபான்கள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததில் இருந்து, அந்நாட்டில் உள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் கிடைக்கவில்லை என்றும், கடுமையான மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பசுபிக் பெருங்கடலில் சக்திமிக்க நிலநடுக்கம்

சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு பின் வாபஸ்

டோங்கோ, நவ.13

தெற்கு பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள டோங்கா என்ற தீவில் நேற்றைய தினம் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. டோங்கா நாட்டின் தலைநகரான நுகுஅலோஃபாவில் இருந்து சுமார் 211 கி.மீ. தூரத்தில், பசிபிக் பெருங்கடலில் சுமார் 24.8 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கத்தின் மையம் அமைந்திருந்ததாகக் கணிக்கப்பட்டுள்ளது.

இந்த சக்திவாய்ந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.3 ஆக பதிவாகியுள்ளது. இதையடுத்து டோங்கா தீவில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு, பின்னர் திரும்ப பெறப்பட்டுள்ளது. இருப்பினும்



முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கரையோரங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டனர். மேலும், இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது

வட எகிப்தில் கால்வாய்க்குள் பஸ் கவிழ்ந்ததில் 21பேர் பலி

கெய்ரோ, நவ.13

எகிப்தில், பஸ் ஒன்று கால்வாய்க்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 21 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எகிப்து நாட்டின் வடக்கு மாகாணமான நைல் டெல்டா மாகாணத்தில் 35 பயணிகளை ஏற்றிக்கொண்டு பஸ் ஒன்று நேற்று சென்று கொண்டிருந்தது.

டஹாலியா மாகாணம் அஹ்ரா நகர் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் வீதியோரம் இருந்த கால்வாய்க்குள் பாய்ந்தது. இதில், கால்வாய் நீரில் பலர் அடித்து செல்லப்பட்டனர். மேலும்பலர்தண்ணீரில்மூழ்கினர்.

இந்த விபத்துக் குறித்து தகவலறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப்பணியில்ஈடுபட்டனர். ஆனால், இந்தவிபத்தில் பஸ்ஸில் இருந்த 21 பேர் உயிரிழந்தனர். எஞ்சிய 14 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனை யில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததால் பஸ் விபத்துக்குள்ளானதாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

ஒக்டோபரில் இந்தியப் பணவீக்கம் 7வீதத்திலும் குறையும் என ஆரூடம்

புதுடெல்லி, நவ.13

ஒக்டோபர் மாதத்துக்கான சில்லரை விலை பணவீக்கம் குறித்த தரவுகள், நாளை வெளியாக உள்ள நிலையில், இந்தியாவின் சில்லறை விலை பணவீக்கம் செப்டம்பரில் 7.4 வீதமாக உயர்ந்துள்ள தாகக் கூறப்படுகின்றது. இது ஒக்டோபரில் 7 வீதத் துக்கும் கீழே குறையும் என்று இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் கூறியுள்ளார்.

செப்டம்பர் மாத பணவீக்க உயர்வுக்கு, உணவு மற்றும் எரிபொருள் விலை அதிகரித்திருந்தது முக்கிய காரணமாக அமைந்தது எனக்கூறியுள்ள அவர், பணவீக்கம் இந்தியாவிற்கு ஒரு பெரிய சவாலாகஉள்ளது என்றும்கடந்த 6 – 7 மாதங்களாக, அரசு மற்றும் ரிசர்வ் வங்கி எடுத்து வந்த நடவடிக்கை களால், ஒக்டோபர் மாதத்தில், பணவீக்கம் கட்டுக்குள் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் தெரிவித் துள்ளார். மேலும், ரிசர்வ் வங்கி பராமரிக்க வேண்டிய பணவீக்க இலக்கான 6 சதவீதத்தை மேலும் அதி கரிக்க தேவையில்லை என்றும், 6 சதவீதத்தை தாண்டினால், அது வளர்ச்சியை பாதிக்கும் என்றும், ஒட்டுமொத்தமாக இந்தியாவின் மேக்ரோ பொருளா தார அடிப்படைகள் வலுவாகவும், மீள்தன்மையு டனும் உள்ளன எனவும் அவர் கூறியுள்ளமை குறிப்பி டத்தக்கது.

மோர்பி பாலவிபத்தில் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு அதானி நிறுவனம் உதவி

காந்திநகர், நவ.13

மோர்பி தொங்குபால விபத்தில் உயிரிழந்தவர்களில் தமது பெற் றோரை இழந்த 20குழந்தை களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு ரூபா 5 கோடி நன் கொடை வழங்கவுள்ளதாக அதானி தொண்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

குஜராத்தில் மோர்பி மாவட் டத்தில் மச்சு ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட 100 ஆண்டுகள் பழமை யான தொங்கு பாலம் ஒன்று 8 மாத காலம் புனரமைக்கப்பட்டு, மறுபயன்பாட்டுக்கு வந்தது. ஆனால், 4 நாள்களில் கடந்த ஒக்டோபர் 30 ஆம் திகதி பாலம் இடிந்து விழுந்தது.

இந்தியா முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்திய இந்த விபத்தில் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என 135 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்த சோகம் ஏற்பட்டுள்ளது. 177 பேர் மீட் கப்பட்டு உள்ளனர் என்பதுடன், சிலர் இதுவரை சிகிச்சையில் உள்ளனர். மேலும் இந்த சம்பவம் பற்றி விசாரிக்க 5 பேர் கொண்ட குழு ஒன்றையும் குஜராத் அரசு அமைத்து உள்ளது. இந்த வழக்கில் 9 பேர் இதுவரை கைது செய்யப்பட்டு விசாரிக் கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இந்த விபத்தில் பெற்றோரில் ஒருவர் அல்லது இரண்டு பேரையும் இழந்த 20 குழந்தைகளின் நலனுக்காக ரூ.5 கோடி நன் கொடை அளிக்க அதானி தொண்டு நிறுவனம் முன்வந்து உள்ளதாகக் கூறப்படுகின்றது. அதி காரப்பூர்வ ஆவண தகவலின்படி, 7 குழந்தைகள் பெற்றோர் இருவரையும், 12 குழந்தைகள் பெற்றோரில் ஒருவரையும் இழந்துள்ளன. இந்த விபத்தில் கணவரை இழந்த கர்ப்பிணியின் இன்னும் பிறக்காத குழந்தையும் உள்ளது.

இவர்கள் அனைவரையும் சேர்த்து, மொத்தம் 20 குழந்தைகளுக்கு தலா ரூ.25 லட்சம் வழங்க அதானி தொண்டு நிறுவனம் முன்வந்து, மோர்பி மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து அதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளது. அத்துடன், இந்த விபத்தில் பலர் உயிரிழந்த சம்பவத்துக்கு அதானி தொண்டு நிறுவனத்தின் தலைவர் பிரீத்தி அதானி வேதனை தெரிவித்து உள்ளமையும் குறிப் பிடத்தக்கது.

நைஜீரிய பெண்கள் விபச்சாரத்துக்கு கடத்தல், டெல்லியில் ஒருவர் மீட்பு..!!

புதுடெல்லி, நவ.13

நைஜீரியாவில் இருந்து வேலைக்கு என அழைக்கப்பட்ட பல பெண்கள் விபச்சார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் நிலையில், கடந்த சில நாள்களுக்கு முன்னர் பெண்ணொருவர் டெல்லி மகளி ஆணையத்தினரால் மீட்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்தியாவின் தலைநகர் டெல்லியில் திலக் நகர் பகுதியில் பல தரப்பு மக்களும் வசித்து வரும் நிலையில், டெல்லி மகளிர் ஆணையத்திற்கு கடந்த 10 ஆம் திகதி அரசு சாரா அமைப்பு ஒன்றிடம் இருந்து கிடைத்த தகவலில் வேலை வாங்கி தருகிறோம் என்ற பெயரில் நைஜீரியாவில் இருந்து 20 வயது இளம்பெண்ணை சட்டவிரோத கும்பல் கடத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அடையாளம் தெரியாத கும்பலால் அந்த இளம்பெண் கடத்தப்பட்டு உள்ளார். இதுபற்றிய தகவல் அறிந்து டெல்லி

மகளிர் ஆணைய குழு, டெல்லி பொலிஸார் மற்றும் என்.ஜி.ஓ. ஆகியோர் அடங்கிய குழு சம்பவ பகுதிக்கு சென்று இளம் பெண்ணை மீட்டுள்ளது. அந்த பெண்ணின் பாஸ்போர்ட்டை கடத்தல் கும்பல் முடக்கி வைத்து உள்ளதாகக் அந்தப் பெண் கூறியுள்ளமையுடன், இதுபோன்று

ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து விபசார தொழிலுக்காக இளம்பெண்கள் பலர் கடத்தல் கும்பலிடம் சிக்கியுள்ளனர் என மீட்கப்பட்ட 20 வயது பெண் டெல்லி மகளிர் ஆணையத்திடம் தெரிவித்து உள்ளார்.

இதனை டெல்லி பொலிஸாரிடம் தெரிவித்து உள்ள டெல்லி மகளிர் ஆணைய தலைவர், இந்தச் சம்பவத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய

விளக்க அறிக்கை ஒன்றையும் டெல்லி பொலிஸாரிடம் கேட்டு உள்ளார். இளம்பெண்ணின் ஆவணங்கள் மற்றும் கடத்தல் கும்பலிடம் சிக்கிய மற்ற இளம்பெண்களை மீட்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் உள்ளிட்ட விவரங்களையும் அளிக்கும்படி டெல்லிபொலிஸாரிடம்அவர்கேட்டுஉள்ளார்எனக்கூறப்படுகின்றது.

பாகிஸ்தான் எல்லையூடாக இந்தியாவிற்குள் ட்ரோன்களின் மூலமான கடத்தல் அதிகரிப்பு

காஸ்மீர், நவ.13

பாகிஸ்தானில் இருந்து இந்தியாவிற்கு எதிராகச்செயல்படும்பயங்கரவாதஅமைப்புகள் பஞ்சாப் மற்றும் ஜம்மு காஷ்மீர் எல்லைகள் வழியே ட்ரோன்கள் எனப்படும் ஆளில்லா குட்டி விமானங்கள் மூலம் போதைப்பொருள், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை வீசி வரும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து டெல்லியில்செய்தியாளர்களிடம் பேசிய எல்லைப் பாதுகாப்பு படையின் இயக்குநர் ஜெனரல் பங்கஜ்குமார் சிங் தெரிவிக்கையில், ட்ரோன்தடயவியல்ஆய்வுக் காக டெல்லியில் அண்மையில் அதிநவீன ஆய்வகத்தை எல்லை பாதுகாப்பு படை நிறுவி உள்ளது. அதன் முடிவுகள் எங்களுக்க மிகவும் ஊக்கமளிக்கின்றன. இதன் மூலம் எல்லை தாண்டிய சட்டவிரோதச் செயலில்

ஈடுபட்டுள்ள குற்றவாளிகளின் முகவரியைக் கூட பாதுகாப்பு ஏஜென்சிகள் கண்காணிக்க முடியும். கடந்த 2020 ஆம் ஆண்டில் இந்தி யா-பாகிஸ்தான் சர்வதேச எல்லை வழியே ஊடுருவிய சுமார் 79 ட்ரோன்களை பி.எஸ்.எவ். கண்டறிந்தது. இது கடந்த ஆண்டு 109 ஆக அதிகரித்தது. நடப்பு ஆண்டில் அது 266 ஆக அதிகரித்துள்ளது. பஞ்சாப் எல்லைப் பகுதி வழியாக இந்த ஆண்டு 215 ட்ரோன்களும், ஜம்முவில் சுமார் 22 ட்ரோன்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தப் பிரச்சினை தீவிரமானது. அவர்கள் ட்ரோன்கள் மூலம் போதைப்பொருள், ஆயுதங்கள், வெடிமருந்துகள், போலி ரூபாய் நோட்டுக்கள்உள்ளிட்டவற்றைஇந்தியாவிற்குள் கொண்டு வருகிறார்கள்.- என்று அவர் தெரிவித்துள்ளார்.

பொத்துவிலில் தனியார் உறுதிக் காணியை சூறையாடுவதற்காக அரசியல் சதித் திட்டம்

அரசியலுக்காக இன உறவைச் சீர்குலைக்க வேண்டாம் பொத்துவில் பிரதேச சபை உப தவிசாளர் கோரிக்கை

(வி.ரி.சகாதேவராஜா)

நாட்டில் விரைவில் தேர்தல்கள் வரவிருக்கின்றன. அதற்காக அரசியலை முன்வைத்து இனங்களிடையே முரண்பாட்டை தோற்றுவிப்பதற்கு சில வங்குரோத்து இனவாதிகள் தூபமிடுகிறார்கள். அதற்கு நாம் ஒரு போதும் இடமளியோம்.

– இவ்வாறு ஊடக மாநாடடில் பேசிய பொத்துவில் பிரதேச சபையின் உப தவிசாளரும் சமூக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்திபன் தெரிவித்தார் .

பொத்துவில் சின்னவட்டிவயலில் உள்ள காணியை அபகரிக்கும் நோக்கில் எழுந்துள்ள சதி தொடர்பில் விளக்கமளிக்க அவர் ஊடகவியலாளர் மாநாட்டை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை பொத்துவிலில் உள்ள விடுதி ஒன்றில் நடத்தினார் .

அதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் த. கலையரசன், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளரான ஜெயசிறில் மற்றும் மாணவர் மீட்பு குழுத்தலைவரும் பிரபல சமூக செயற்பாட்டாளருமான செல்வராஜா கணேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அச்சமயம் ஆல யங்களின் வண்ணக்கர்மார் , விகாராதிபதிகளும் அதில் கலந்துகொண்டார் கள்

அங்கு உதவி தவிசாளர் பார்த்திபன் மேலும் தெரிவிக் கையில் –

பொத்துவிலின் பூர்வீகம் எங்களுக்கு நன்கு தெரியும். இங்குஏனைய இனங்கள்கடந்த காலங்களில் அரச நிலங்களை யும் தமிழர்களின் பூர்வீக காணி களையும் எவ்வாறு அபகரித்து தமது வணக்க தலங் களுக்கு எடுத்துக் கொண்டார்கள் என்பதை நான் அறிவேன். அதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. தமிழர்களின் பூர்வீகக் காணிகளையும் அரச காணிக ளையும் அபகரித்து வரும்பொழுது எல்லாம் நாங்கள் இன முரண்பாட்டை தூண்டிவிடக்கூடாது என்பதற்காக அமைதியாக இருந்தோம்.

ஆனால், இன்று எமது உறுதிக்காணிகளில் கை வைக்க முன்வந்துள்ளனர். இனியும் நாங்கள் அமைதி காக்க முடியாது. அதற்காகவே இங்கு குரல் எழுப்புகின் றோம். இந்த அபகரிப்பை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அரச அதிகாரிகள் நீதியான முறையில் சட்டரீதி யாக நடந்து கொள்ள வேண்டும். வரலாற்றை மாற்றிய மைக்க இடமளிக்கமுடியாது.

குறித்த காணி தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் தொடக்கம் சகல உறுதி ஆவணங்களும் என்னிடம் உள்ளன. எந்த நீதிமன்றத்திலும் சமர்ப்பிக்க தயார்.

மட்டக்களப்பு பொத்துவில் பிரதான வீதியில் உள்ள பொத்துவில் சின்ன வட்டிவயல் 17 ஏக்கர் காணி கடந்த 120 வருட காலமாக தனியாரின் உறுதிப் பூமியாக இருந்து வந்தது . – என்றார் அவர்.

பொத்துவில் சின்னவட்டிவயலில்உள்ள உகந்த மலை ஸ்ரீ முருகன் ஆலய காணியை அபகரிக்கும் நோக்கில் நாளை திங்கட்கிழமை சில இனவாதிகளால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட இருக்கின்ற இந்த வேளையிலே அவர் இந்த கருத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

1920 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தை சேர்ந்த காசிநாதர் வைத்திலிங்கம் மார்கண்டர் பராமரித்து வந்தி ருந்தார். அதனை மட்டக்களப்பு நாவற்குடாவைச் சேர்ந்த வள்ளியம்மை தேவநாயகம் என்பவருக்கு விற்றுக் கையளித்தார்.

அவர் 1938 ஆம் ஆண்டு உகந்தமலை முருகன் ஆலயம் மற்றும் ஐந்து ஆலயங்கள், 02 பன்சலைகள் 50க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கும் அன்பளிப்பு செய்தார். அதன் பின்னர் அவர்கள் இக் காணியை தொடர்ச்சியாக பராமரித்து வருகின்றனர். பலர் வீடுகளை அமைத்து வாழ்கின்றனர்.

2015 இல் எனது வேண்டுகோளில் அன்று இந்து கலாச்சார அமைச்சராக இருந்து டி.எம். சுவாமிநாதன் அவர்களைக் கொண்டு கதிர்காம பாதயாத்திரை செல் பவர்களுக்கான தங்குமிடம் ஒன்றை அமைக்க அடிக்கல் நட்டோம். அரசியல் மாற்றத்தால் அது தொடரவில்லை.

கடந்த 84 வருட காலமாக நாங்கள் தான் இதனை பராமரித்து வருகின்றோம். இது அரச காணியோ அல்லது வேறோருவரின் காணியோ அல்ல என்பதனை ஆணித்தரமாகத் தெரிவிக்கின்றேன். – என்றார்.

‘மனிதம் இல்லா பூமி’ நூலின் அறிமுக விழா கல்முனையில்

(நூருல் ஹுதா உமர், எம்.என்.எம்.அப்ராஸ்)

கரவாகு கலை இலக்கிய மன்றம் மற்றும் வியூகம் வலையமைப்பு ஆகியவற்றின் ஏற்பாட்டில் அக்குறணை அஸ்மியா நிஸாம் எழுதிய ’மனிதம் இல்லா பூமி’ கவிதை நூல் அறிமுக விழா, கல் முனை மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தி யா குலய மண்டபத்தில் கரைவாகு கலை இலக்கிய மன்றத்தின் தலைவரும், கலைஞருமான எஸ். ஜனூஸ் தலைமையில் நேற்று சனிக்கிழமை இடம் பெற்றது.

நூலின் நயவுரையை கவிதாயினி சித்தி மகூராவும், நூல் விமர்சனத்தை இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜெஸ்மி எம்.மூஸாவும், வாழ்த்துரைகளை சர்வதேச மாற் றத்திற்கான பங்காளிகள் நிறுவனத்தின் சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட ஆலோசகர் ரிாத் ரீப், அறிஞர் சித்தி லெப்பை ஆய்வு மையத்தின் தலைவர் சட்டத்தரணி மர்சூம் மௌலானா, சமூக மேம்பாட்டுக்கான நல்லிணக்க பேரவையின் தலைவர் முனைம ருதவன் எம்.எச்.எம். இப்ராஹிம் ஆகியோரும் நிகழ்த்தினர்.

இந்நூல் அறிமுக நிகழ்வில் இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரும், சாய்ந்தமருது பிரதேச செயலக முன்னாள் செயலாளருமான ஏ.எல்.எம்.சலீம் பிரதம அதிதி யாக கலந்து கொண்டார்.

மேலும், நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பி னர் எம்.பி. நவாஸ், பாலமுனை ஹோமியோபதி வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.எம். முனீர் அபூபக்கர், மாளிகைக்காடு சபீனா முஸ் லிம் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம் அஸ்மி, ம ருதம் கலைக்கூடல் மன்ற தலைவர் கலைஞர் அஸ் வான் எஸ்.மௌலானா, துணிந்தெழு நிர்வாகக்குழு உறுப்பினர் எம்.நஸ்றீன் பாஸித் உட்பட கலை, இலக்கிய பிரமுகர்கள், ஊடகவிய லாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கண்டி மாவட்டம் அக்குறணையை சேர்ந்த அஸ்மியா நிஸாமின் முதலாவது வெளியீடான ’மனிதம் இல்லா பூமி’ எனும் இந்நூல் மணிப் புலவர் மருதூர் ஏ. மஜீத் நினைவரங்கில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

முகத்துவாரம் வெட்டப்பட்டதால் பாம்புகள், ஆமைகளும் பெயர்வு

(ப்ரூக் சிஹான்)

நாட்டின் பல பாகங்களிலும் தொடர்ச்சியாக பெய்து வரும் மழையால் வெள்ளம் தேங்கி வருவதுடன் ஆறுகளும் பெருக்கெடுத் துள்ளன. இதனால் தற்போது அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள நீரை வெளியேற்றுவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரிய கல்லாறு முகத்துவாரம் வெட்டப்பட்டுள்ளதுடன் அம்பாறை மாவட்டத்தின் சிறிய முகத்துவாரங்களும் அண்மையில் வெட்டப் பட்டன.

இதனால் கடலை நோக்கி பெருக்கெடுத்து ஓடும் ஆறு கடலுடன் கலக்கும் போது ஆற்று நீருடன் ஆற்றில் வளரும் சல்லுத்தாவரங் களும் கடலில் கலக்கின்றன.

இத் தாவரங்களுடன் பாம்பு, ஆமை போன்ற ஊர்வனவும் கடலில் இருந்து உயிருடன் கரைகளில் ஒதுங்கி கடற் கரையோரங் களில் காணப்படும் படகு, தோணி, கற்கள் மற்றும் நீர் வடிந்தோடும் துவாரங்களுக்குள் பதுங்கி இருக்கின்றன என நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

இதனால் மருதமுனை, பெரியநீலாவணை, காரைதீவு, கல்முனை, நிந்தவூர் கடற்கரைக்கு செல்பவர்கள் மிக அவதானமாக இருக்கு மாறு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

வியட்நாமிலுள்ள இலங்கையர் குறித்து சர்வதேசச் சட்டங்களே தீர்மானிக்கும்!

விரும்பினால் அழைத்துவருவோம் என்கிறார் அலி சப்ரி

வியட்நாமில் உள்ள தற்காலிக முகாமில் தங்கவைக் கப்பட்டுள்ள 303 இலங்கையர்களை மீளவும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு இலங்கை அரசாங்கம் தயாராகவுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலிசப்ரி தெரிவித்தார்.

அதேநேரம் குறித்த இலங்கையர்கள் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக கனடா நோக்கி பயணிக்க முயற்சித்திருந்த நிலையில் மீண்டும் நாடுதிரும்ப விரும்பாதிருப்பார்களாயின் அவர்கள் தொடர்பில் வியநட்நாம் குடிவரவு குடியகல்வு சட்டங்களும் சர்வதேச புலம்பெயர்தல் சட்டங்களே தீர்மானிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக சிங்கப்பூரில் இருந்து மீன்பிடிப் படகொன்றின் மூலம் சட்டவிரோதமாக கனடா செல்வதற்கு 303 இலங்கையர்கள் முயன்றிருந்த நிலையில் படகுக் கோளாறு காரணமாக தத்தளித்தவர்களை வியட்நாமிற்கு பாதுகாப்பாக்க கொண்டுவரப்பட்டு தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் தம்மை நாட்டுக்கு மீண்டும் அழைத்துச் செல்ல வேண்டாம்

என்றும் தம்மை ஐ.நா.பொறுப்பேற்றுக் கொள்ளுமாறும் பகிரங்கக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் இந்த விவகாரம் தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி, ஆபத்தான படகுப்பயணத்தில் பாதிக்கபட்டு வியட்நாமில் தற்காலிகமாக தங்கவைக் கப்பட்டுள்ள 303 இலங்கையர்களை மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை வியட்நாமில் உள்ள இலங்கைத் தூதுவர் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பாக அவர்களுக்கு தற்காலிக கடவுச்சீட்டுக்கள் மற்றும் விமானச் சீட்டுக்களை வழங்கி மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாடுதிரும்ப மறுத்தால்....?

எனினும் நாட்டில் காணப்படுகின்ற பொருளதார நெருக்கடிகளை மையப்படுத்தியே படகு மூலம் கனடாவுக்குச் செல்வதற்கு முயற்சிகளை மேற்படி நபர்கள் மேற்கொண்டுள்ளார்கள். அவர்கள் மீண்டும் தம்மை நாட்டுக்கு அழைத்து வருவதை மறுப்பார்களாக இருந்தால் அதன் பின்னர் சர்வதேசச் சட்டங்களும் வியநட்நாமின் குடிவரவு குடியகல்வுச் சட்டங்களும் தான் அவர்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும்.

குறிப்பாக ஐ.நாவின் புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம் உள்ளிட்ட தரப்பினரே தீர்மானங்களை எடுக்கவுள்ளனர். – என்றார்.

அதிகாரத்தில் உள்ளவர்களின் அலட்சியத்தால் பொலிஸாரின் அடாவடிகள் தொடர்கின்றனவாம்!

சாலிய பீரிஸ் காட்டம்

அதிகாரத்தில்உள்ளவர்களி;ன் அலட்சியம்காரணமாகபொலிஸாரின் அடாவடிகள் தொடர்கின்றன என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

நேற்று (சனிக்கிழமை) இடம் பெற்ற மூன்று சம்பவங்கள் இலங்கைபொலிஸார்எவ்வளவுதூரம்தரம்தாழ்ந்து விட்டனர் என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

முதலாவது சம்பவம் கையில் பதாகைகளுடன் நடந்துகொண்டிருந்த பெண்களை பொலிஸார் துன்புறுத்தியமை.

இரண்டாவது, பொலிஸ்உத்தியோகத்தர் ஒருவர் பெண் பொஸிஸார் ஒருவரின் கழுத்தின் மீது கையை வைத்து அழுத்துவது.

மூன்றாவதாக, சிரேஷ்ட சட்டத்தரணியொருவர்

என்னை அழைத்து தனது உதவியாளரை அடையாள அட்டை வைத்திருக்கவில்லை எனத் தெரிவித்து பொலிஸார் கைதுசெய்துள்ளனர் எனத்தெரிவித்தார். அவரை பொலிஸ்நிலையத்தில் வைத்துள்ளனர்.

பொலிஸாரை கையாளும் அதிகாரம் படைத்தவர்கள் அதிகாரத்தில் உள்ளவாகளின் தோல்வி மெத்தனப்போக்கால் பொலிஸாரின் ஈவிரக்க மற்ற தன்மைகள் தொடர்கின்றன. – என்றார்.

அரசமைப்பு பேரவைக்கு நிமலை பரிந்துரை செய்தார் ஜனாதிபதி!

அரசமைப்பு பேரவையை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளஎளநாடாளுமன்றஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் நிமல் டி சில்வா, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதமர் தினேஷ் குணவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ ஆகியோர் இந்த வாரத்தில் இரண்டு தடவை கள் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இதன்போது அரசமைப்பு பேரவையின் தலைவர் என்ற வகையில் சபாநாயகர்,சபைக்கானதமது வேட்பாளர்களை பெயரிடுமாறு பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரிடம் கோரியிருந்தார்.

அதன்படி பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் தங்களது வேட்பாளர்களின் பெயரைதாமதமின்றி அறிவிப்பதாக உறுதியளித்தனர்.

இந்நிலையில் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை அந்த சபைக்கான வேட்பாளராகப் பெயரிட்டுள்ளார்.

அரசமைப்பு சபையில் சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதியின் நியமனம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இருக்கும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் மற்ற சிறிய கட்சிகள் மற்றும் சிவில் சமூகத்தைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் உள்ளடக்கப்படவுள்ளனர்.

பஸ் கட்டணத்தில் மாற்றம் இல்லை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம்

நேற்று முதல் டீசலின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் பஸ் கட்டண திருத்தத்தில் மாற்றம் இடம்பெறாது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை பஸ் கட்டண திருத்தம் தொடர்பில் எவ்வித உடன்படிக்களும் ஏற்படவில்லை எனவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

மேலும் ஒக்ரோபர் 17 ஆம் திகதி டீசல் விலை 15 ரூபா குறைக்கப்பட்டு 15 ரூபா உயர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் புதிய நிர்வாகத் தெரிவு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 30 ஆவது பேராளர் மாநாடு புத்தளத்தில் நடைபெற்ற நிலையில் புதிய நிர்வாகத் தெரிவுகள் இடம்பெற்றுள்ளன.

அதனடிப்படையில் கட்சியின் தலைவராக மீண்டும் ரவூவ் ஹக்கீம் தெரிவு செய்யப்பட்ட நிலையில் தவிசாளராக ஏ.எல்.அப்துல் மஜீத் தெரிவாகியுள்ளார்.

அதேநேரம் சிரேஷ்ட துணைத் தலைவராக எம்.எஸ்.எம்.அஸ்லமும் துணைத் தலைவர்களாக எம்.ஐ.எம். மன்சூர், யூ.டி.எம். அன்வர், அலிஸாஹிர் மௌலானா, எஸ்.எம்.ஏ. கபூர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

செயலாளராக நிசாம் காரியப்பரும் பொருளாளராக எம்.பைசல் காசிம் எம்.பியும் பிரதி தவிசாளராக ஏ.ஜே.எம். ரிஸ்வியும் மஜ்லிஸ்-இஷூரா தலைவராக ஏ.எல்.எம். கலீலும் (மௌலவி) தேசிய அமைப்பாளராக எம்.எஸ்.தௌபீக் எம்.பி. அரசியல் அமைப்பு விவகாரங்கள் இயக்குநராக எம்.பி.பாரூக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய ஒருங்கிணைப்பு செயலாளராக ரஹ்மத் மன்சூரும் பிரதி தேசிய ஒருங்கிணைப்பு செயலாளர் சகோ. அப்துல் ஹையும் தேசிய பிரசார செயலாளராக யு.எல்.எம்.என். முபீனும் உலமா காங்கிரஸின் பிரதிநிதியாக எச்.எம்.எம். இல்யாஸாம் (மௌலவி) பிரதி செயலாளராக மன்சூர் ஏ. காதரும் பிரதி பொருளாளராக ஏ.சி.யாஹ்யா கானும் மஜ்லிஸ்-இஷூரா துணைச் செயலாளராக ஸியாத் ஹமீத்தும் தேசிய பிரதி அமைப்பாளராக எம்.எஸ். உதுமாலெப்பையும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம்ரூபவ் அரசியல் மற்றும் மத விவகாரங்கள் ஒருங்கிணைப்பாளராக ப்ராஸ் மொஹமட் தம்பியும் சமூக சேவை மற்றும் பேரிடர் நிவாரண ஒருங்கிணைப்பாளராக கே.எம்.எம். ரஃபீக் இளைஞர் மற்றும் வேலைவாய்ப்பு விவகாரங்களின் ஒருங்கிணைப்பாளராக எஸ்.எச்.எம்.நியாஸும் பெண்கள் காங்கிரஸ் பிரதிநிதியாக சித்தி ரிஃபாயா இப்தயும் மாநாடு செயலாளராக அர்ஹாத் நிஜாம்தீனும் மஜ்லிஸ்-இஸூரா செயலாளராக யு.எம். வாஹித்தும் தலைமை மற்றும் பயிற்சி இயக்குனநராக மொஹமட் மஹ் ஹில்மியும் மேம்பாட்டுத்திட்ட இயக்குநராக பொறியியலாளர் ஷிப்லி பாரூக்கும் சுகாதார இயக்குநராக கே.எம்.ஆமீனும் சட்ட உதவி இயக்குநராக ஜே.எம். லஹீர் இளைஞர் காங்கிரஸ் தேசிய அமைப்பாளராக ஆரிப் சம்சுதீனும் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுகாதார மருத்துவ மாதுக்களுக்கான அறிமுக பயிற்சி நெறி கல்முனையில்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் புதிதாக கடமையில் இணைத்துக் கொள்ளப்பட வுள்ள சுகாதார மருத்துவ மாதுக்களுக்கான அறிமுக பயிற்சிநெறி தாய் – சேய் நலப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எச் ரிஸ்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம் றிபாஸ், பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ. அப்துல் வாஜித் ஆகியோர் பங்கு பற்றினர்.

பயிலுனர்களுக்கு அவர்களின் கடமை தொடர்பிலும் மட்டக்களப்பு தாதியர் கல்லூரிக்கு சுமார் 16 மாதங்கள் பயிற்சிக்காக அனுப்பப்படும் நோக்கத்தையும் விரிவாக தெளிவுபடுத்தி, இப்பயிற்சியின் பின்னர் சிறந்த செயற்றிறன் மிக்க சேவையை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தனர்.

இந்நிகழ்வின் இறுதியில் இரண்டு வார கால பயிற்சியை பெற்ற அந்தப் பயிலுநர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

கோப்பாய்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ததில் இருவர் காயமடைந்தனர்.

நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்த தனியார் தொண்டு நிறுவனம் ஒன்று மர நடுகையில் ஈடுபடும் பொருட்டு சிரமதானப் பணியில் ஈடுபடும் போது மர் மப்பொருள் வெடித்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வெடிப்புச் சம்பவத்தின் போது தனியார்தொண்டுநிறுவனப்பணியாளர்கள் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் இந்தப் பகுதியில் புல்லு வெட்டும் பணியில் ஈடுபட்டு வருகின் றோம். இன்று வழமை போல் நாங்கள் மரம் நடுவதற்காகப் புல்லு வெட்டிக் கொண்டிருந்த போது திடீரென மர்மப் பொருள் வெடித்தது – என்று தெரிவித் தனர். யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று ஆராய்ந்து வருகின்றனர்.

இலங்கை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைல் தொலைவில் இந்தியக் கடல் பகுதியில் மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த நிலையில் கைது செய் யப்பட்டனர்.

கைதான மீனவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக காக்கிநாடா பொலிஸ்நிலையத்தில்ஒப்படைக்கப்பட் டுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வாய்ப்பேச்சு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்முடன் பேசுவதென்றால் முக்கியமாக புதிய அரசமைப்பு தொடர்பில்தான் அந்தப் பேச்சு அமைய வேண்டும்.

தமிழ் பேசும் மக்களுடைய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு புதிய அரசமைப்பின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்த விடயம் சம்பந்தமாக எமது நிலைப்பாட்டை விளக்கி நாம் எழுத்துவடிவிலான கோரிக்கைகளை ஏற்கனவே இலங்கை அரசிடம் சமர்ப்பித்திருக்கின்றோம். அந்தக் கோரிக்கைகள் மிகவும் விவரமானமானவை.

ஆனால், அதன் அடிப்படையில் ஒன்றும் நடைபெறவில்லை. ஆட்சிகள் மாத்திரம்மாறியிருக்கின்றன. ஒவ்வொரு ஆட்சியிலும் தாங்கள் அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று அரச தரப்பினர் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் ஒன்றுமே செய்யவில்லை.

இந்த விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடு வித்தியாசமாக – நம்பிக்கைக்குரியதாக – முன்னேற்றம் காணக்கூடிய வகையில் கையாளப்படுமாக இருந்தால், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள் என்ற வகையில், எங்களால் இயன்ற ஒத்துழைப்பை நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதற்கு வழங்குவோம் – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.11.2022 இல் வெளியிடப்பெற்றது.